# ஆசிரை

**அன்பின் வாசக நெஞ்சங்களே!**

மே மாதம் வணக்கமாதம், என்று நாம் எல்லோரும் அழைப்பது வழக்கம். இதன் சிறப்பு மரியன்னை போத்துக்கலில் மூன்று சிறுவர்களுக்கு பற்றிமா என்னும் இடத்தில் காட்சி கொடுத்தது மே மாதம் 13ம் திகதி ஆகும். லூசியா என்னும் 9வயது சிறுமிக்கும், யசிந்தா என்னும் சிறுமிக்கும், பிரான்சிஸ்கா என்றும் 7வயது சிறுமிக்கும் மிகவும் முக்கியமான காட்சிகளாக வெளிப்படுத்தினார். 1917ம் ஆண்டு இது இடம் பெற்றது. இவ்வருடம் இக்காட்சி வெளிப்படுதலை யிட்டு 100வது வருடத்தை நினைவு கூருகின்றோம். செபமாலை ஓதும்படியாகவும், பாவிகளுக்காக செபிக்கும் நாடுகள், நாட்டுத் தலைவர்கள் மனந்திரும்பும்படியாகவும், செபிக்கும்படியும் காட்சியிலே வெளிப்படுத்தியிருக்கின்றார். மக்களின் மனங்கள் மறுபடியாகவும், இறைவனின் வழிக்கு மீண்டும் வரும்படி நம்பிக்கையோடும், உறுதியான விசுவாசத்தோடும் செபிக்கும்படி கேட்டிருக்கின்றார். இன்றைய உலக நாடுகளின் போக்கும் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. வட கொரியாவில், மக்களின் நிலைமை மிக மோசமான நிலை உள்ளதை காணக்கூடியதாகவும், அதை எதிர்த்து பல நாடுகள், இன்னும் வன்முறையான செயற்பாடுகளில் இறங்கப் போவதாகவும் எச்சரித்துகொண்டு இருக்கின்றார்கள். இந்தக் கட்டத்தில் மூன்றாம் உலக யுத்தம் ஆரம்பமாகுமோ? என்ற அச்சம் எழுந்தள்ள நிலையில், நாம் மிகவும் செபிக்க வேண்டியவர்களாக உள்ளோம். மூன்றாம் உலக யுத்தம் ஆரம்பமானால் பெரிய அழிவு வரும், இன்னும் பல மக்கள் பலியாவார்கள். யுத்தத்தின் விளைவு மிகவும் நீண்ட நாட்களுக்கு போய்க்கொண்டே இருக்கும். ஆகவே உறுதியாகவும், நம்பிக்கையோடும் செபமாலை ஓதி செபிக்கும்படி மரியன்னை இந்த 100வது நிறைவு ஆண்டிலே நம் எல்லோருக்கும் செய்தி விடுத்துக்கொண்டிருக்கின்றாள். ஆகவே இந்த விசேட கருத்துக்காக மன்றாடுவோம். வரவிருக்கும் மே மாதம் எமக்கு செபமாலை ஒவ்வொரு நாளும் ஓதுகின்ற நாட்களாகவும், எமது பங்கிலே ஒவ்வொரு வீடு வீடாக மடு அன்னையின் திருச்சுரூபம் எடுத்துச்சென்று குழு குழுவாக செபமாலை ஓதவும் அழைக்கப்பட்டுள்ளோம். ஆகவே செபமாலை ஓதும் குடும்பங்களாக மாறவும் அன்னைக்கு புகழ் சேர்க்கவும் துணிவோம்.

**இந்த 100வது ஆண்டு இறை அருளைப் பொழியும் ஆண்டாக மாறுவதாக**

**அருட்பணி யூட் நிக்ஸன்**
*Parish Priest*
*Our Lady of Deliverance Tamil Catholic Mission*
*Montreal (QC), Canada.*